1979 மார்ச் 10] *[திரு. க. அன்பழகன்]*

யானது என்பதை அறிந்து கொள்ளும் பொறுப்பு நமக்கு இருக்கிறது. ஆகவே இதில் எது உண்மை, எது தவறானது என்று அறிந்து கொள்வதற்காக இந்தக் கேள்வி எழுந்தது. உண்மை இன்னும்கூட அரசுச் சார்பில் சரியாக வரவில்லை. உள்நோயாளியாக அவரை வைத்திருந்ததாக அரசாங்கம் ஒப்பு கொள்ளவில்லை. அவர் உள் நோயாளியாக இருந்ததற்கு அட்டை இருக்கிறது. ஆகவே அரசாங்கம் தவறான கருத்தை இந்த அவைக்குத் தரக்கூடாது. உள் நோயாளியாக வைத்திருக்க வில்லை என்று தெரிவித்திருந்தால் அதுவும் தவறு. இதில் யார் தவறாகச் சொல்லியிருக்கிறார்கள் என்று பார்க்கவேண்டும். தவறான தகவலை இந்த அவைக்கு தந்திருந்தால், அது அமைச்சர் மூலமாக வந்திருந்தாலும் அந்தத் தவறு இனிமேலும் நடைபெறக் கூடாது என்பதற்காக இந்த உரிமை மீறல் பிரச்சினையை அவைத் தலைவர் அவர்கள் உரிமைக் குழுவிற்கு விட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : இந்த உரிமைப் பிரச்சினை பற்றிய தீர்ப்பை பின்னால் அறிவிக்கிறேன்.

(1) தகவல் கோரல்—தொடர்ச்சி.

(இ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் குறித்து.

<u>திரு. நா. சுந்தரராஜ்</u> : நான் கிளப்பிய உரிமைப் பிரச்னை என்னவாயிற்று ?

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : இந்த மன்றத்தைக் கட்டுப் படுத்த எந்த நீதிமன்றத்திற்கும் அதிகாரம் இல்லை. அதே போன்று அந்த நீதிமன்றங்களிலும் நாம் நுழைவதற்கு அனுமதியில்லை. ஆகவே, அந்தந்த மன்றங்களுக்கு உள்ள உரிமைகளில் யாரும் தலையிட முடியாது.

<u>திரு. மு. அம்பிகாபதி</u> : பாயின்ட் ஆப் ஆர்டர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த மலேயா கோவிந்தசாமி, சித்த மல்லி தியாகராஜ குருக்கள் ஆகியோர் கைது செய்யப்பட்டிருப்பது பற்றி கொடுத்திருக்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: தினமும் இதைச் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். ஒரு தடவை நக்ஸலைட்ஸ் பற்றி விவாதித்து, அது முடிந்து விட்ட விவகாரம்.

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்</u> : நக்ஸலைட்ஸ் என்று கருதப்பட்டவர்களும் சந்தேகப்பட்டவர்களும் கைது செய்யப் பட்டது உண்மை. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்பிகாபதி அவர்கள் அன்று குறிப்பிட்டார்கள், சந்தேகிக்கப்

பட்டவர்கள் என்ற அடிப்படையில் தங்கள் கட்சியைச் சேர்ந்த வர்கள் யாரேனும் கைது செய்யப்பட்டிருந்தால் அது பற்றி மறு ஆய்வு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். நான் அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புவது, மறுபரிசீலனை நடக்கிறது, ஆங்காங்கே பலர் விடுதலை செய்யப்பட்டும் வரு கின்றனர் என்பதுதான்.

திரு. நா. சுந்தரராஜ் ; 42–வது விதியின் கீழ், கூவம் பக்கிங்காம் தேசியத் தொழிலாளர்கள் சங்கத்தைச் சார்ந்தவர்கள் உண்ணாவிரதம் இருக்கிறார்கள் 5 ஆம் தேதியிலிருந்து....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திங்கட்கிழமை எடுத்துக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, எல்லா எதிர்க்கட்சித் தலைவர்களும் கொடுத்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தின் மீது விவாதம் வந்தபோது, 8 ஆம் தேதி முதலமைச்சர் அவர்கள் பேச்சுவார்த்தைக்கு அழைத்தார்கள். இந்தப் பிரச்சினை சம்பந்தமாக....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : புதிய பிரச்சினைக்குப் போகாதீர்கள். தயவுசெய்து இப்போது அதை கிளப்ப வேண்டாம். இது சம்பந்தமாக அமைச்சர் அவர்கள் நேற்று ஸ்டேட்மென்ட் கொடுத்துவிட்டார்கள்.

திரு. சோ. அழகர்சாமி : அதன்மீது திருப்தி இல்லை என்ற அளவில்தான் மீண்டும் அதைப்பற்றி எழுதிக் கொடுத்திருக்கி றோம். அதைத்தான் நான் சொல்லுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எழுதிக் கொடுத்திருக் கிறீர்கள், அது என்னுடைய அறையில் இருக்கிறது. இன் றைக்கு நான் அதை எடுத்துக்கொள்ளவில்லை.

(திரு. சோ. அழகர்சாமி எழுந்து நின்று கொண்டிருந்தார்.)

திரு. நா. சுந்தரராஜ் : மதிப்பிற்குரிய அழகர்சாமி அவர் கள் சொல்கின்ற விஷயம் மிகவும் முக்கியமான பிரச்சினை. தமிழ்நாடு முழுவதும் இன்றைக்கு வந்திருக்கின்ற பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுபற்றி அமைச்சர் அவர்கள் நேற்று அறிக்கை தந்து விட்டார்கள். அதன் மீது மீண்டும் பேச வேண்டும் என்றிருந்தால் என்னிடம் எழுதித் தர வேண்டும். அந்த முறையில்தான் புதிதாக அழகர்சாமி அவர்கள் எழுதித் தந்திருக்கிறார்கள். அதை நாளைக்கு எடுத்துக்கொள்வதாக இருக்கின்றேன்.

1979 மார்ச் 10]

திரு. சோ. அழகர்சாமி : எதிர்க்கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் பேசப்பட்டதற்கு மாறாக அமைச்சர் அவர்கள் தந்திருக்கிறார்கள் ஆகவே தான் அதுபற்றி மீண்டும் விவாதிக்க வேண்டும் என்று சொல்லுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் விவாதிக்க வேண்டும் என்று எழுதித தந்திருக்கிறீர்கள, அதை சம்பந்தப்பட்ட அமைச்சரிடம் கொடுத்து இதைப்பற்றிய பதிலை தெரிந்து கொள்வதற்காக வைத்திருக்கிறேன். அதை நான் விட்டுவிடவில்லை. ஆகவே தயவு செய்து உட்காருங்கள்.

திரு. நா. சுந்தரராஜ் : இதை திங்கள்கிழமையன்றாவது எடுத்துக் கொள்ளலாம் என்று உறுதியையாவது தாருங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படி என்னை நீங்கள் கட்டாயப்படுத்த முடியாது...............

திரு. மு. அம்பிகாபதி : நாங்கள் எல்லோரும் சேர்ந்துதான் எழுதிக் கொடுத்திருக்கிறோம். இது மிகவும் முக்கியமான பிரச்னை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படி எல்லோரும் எழுந்து பேசிக் கொண்டிருக்கக் கூடாது. எழுதித் தந்திருப்பதை எல்லாம் பின்னால் கவனிக்கிறேன் என்றுதான் நான் சொல்லியிருக்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : இது சம்பந்தமாக 42-வது விதியின் கீழ் நானும் ஒன்று எழுதிக் கொடுத்திருக்கிறேன். அரசாங்கத்தின் தரப்பில் கொடுத்த வாக்குறுதிக்கு மாறாக இப்போது அறிக்கை தரப்பட்டிருக்கிறது. அதைத்தான்...........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படி ஒவ்வொருவரும் விளக்கிக் கொண்டிருக்க வேண்டிய தேவையில்லை. எழுதித் தந்தவைகளை சம்பந்தப்பட்ட அமைச்சர்அவர்களிடம் தெரிவித்து அவர்கள் நிலை என்ன என்பதை தெரிந்துகொள்வதற்காகத்தான் என் அறையில் வைத்திருக்கிறேன்.

திரு. நா. சுந்தரராஜ் : இது முக்கியமான பிரச்னை......

(திரு. அம்பிகாபதி, திரு. சோ. அழகர்சாமி, திரு. தீ. சு. நல்லதம்பி முதலியோர் எழுந்து நின்று கொண்டிருந்தனர்......)

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; இப்படி ஒவ்வொருவரும் எழுந்து நின்று கொண்டிருந்தால், நான் நிகழ்ச்சியை நடத்துவதா அல்லது இதைப்பற்றியே பேசிக்கொண்டிருப்பதா ?

திரு. சோ. அழகர்சாமி : மின்சாரத்தை துண்டிப்பதில்லை என்றாவது அமைச்சர் அவர்கள் சொல்லட்டும்.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படி நான் அமைச்சர் அவர்களைவற்புறுத்த முடியாது. நீங்கள் எழுதித் தந்திருக்கிறீர்கள் அதை அவர்களிடம் கொடுத்துபதிலைப் பெற முயற்சி செய்வேன், அவ்வளவுதான், அழகர்சாமி அவர்களைப் பொறுத்தவரை நீங்கள் எழுதித் தந்தது என்னிடத்தில் இருக்கிறது. அதை அரசின் கவனத்திற்கு கொண்டு போய், அவர்களின் பதில் என்ன, இதில் அவர்களின் கொள்கை என்ன என்றுதான் என்னால் கேட்க முடியும், நான் அவர்களிடம் போய் கட்டாயமாக பதில் சொல்லியே ஆகவேண்டும் என்று வற்புறுத்த முடியாது, நீங்கள் கொடுத்த பிரச்னை என்னிடத்தில் இருக்கிறது, அதை பரிசீலிக்கிறேன் என்று சொல்லிவிட்டேன், நீங்கள் கொடுத்த சில மணி நேரத்திற்குள் அது என்னவாயிற்று என்று கேட்டால் நான் என்ன செய்வது ?

திரு. சோ: அழகர்சாமி : இந்தப் பிரச்னை சம்பந்தமாக மூன்று நாட்களாக விவாதிக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தப் பிரச்னை சம்பந்தமாக அமைச்சர் அவர்கள் நேற்று அறிக்கை தந்திருக்கிறார்கள் அத்துடன் அது முடிந்து விட்டது. அது அழகர்சாமி அவர்களுக்கு திருப்திகரமாக இல்லை என்று மீண்டும்42-வது விதியின்கீழ் இதைப் பற்றி விவாதிப்பதற்கு அனுமதி தரவேண்டும் என்று எழுதித் தந்திருக்கிறார்கள், அதை நான் அமைச்சர் அவர்களிடம் எடுத்துச் சொல்லி, இப்படி உறுப்பினர் அவர்களுக்கு இதைப்பற்றி திருப்தி இல்லை, மக்கள் மத்தியில் இது சம்பந்தமாக பதட்டமான நிலையிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள் என்று என் கவனத்திற்கு கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதை அவர்களிடம் சொல்லி, அவர்களிடமிருந்து சீக்கிரமாக பதிலைப்பெற்று இங்கு வைப்பதற்கு முயற்சி எடுத்துக்கொள்வேன், அல்லது அவர்கள் கொள்கையை அறிந்து பின்னால் இது தேவையில்லை என்று நான் கருதினால் அதை என் அறையிலேயே தள்ளிவிடுவதாகவும் இருக்கிறேன். ஆகவே இது சம்பந்தமாக என்னை வற்புறுத்த முடியாது. என்னை அடுத்த நிகழ்ச்சிக்கு போகவிடுங்கள்.

திரு நா. சுந்தரராஜ் : இதை திங்கள் கிழமையன்று டுத்துக்ள ளகொள் அனுமதிக்கப்படுமா ?